JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.22/2025
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயா | தாலுகா | |
| தந்தை பெயர் | ராஜ்குமார் | தொழில் | சட்டக்கல்லூரி மாணவி |
| கிராமம் | சென்னை | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் சட்டக்கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் தங்கையின் கணவர். சாட்சிகள் கவர்தலை, கமலா, அன்னலட்சுமி ஆகியோர்களை தெரியும். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 6 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 04.11.2020 ம் தேதியன்று 8.00 மணியளவில் ஆஜர் எதிரி என்னை பொது இடத்தில் வைத்து பெண் என்று பாராமல் அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, என்னை அடித்து

காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல, எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi